ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 1.10 – வட்டுநடுவே

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.10 – வட்டுநடுவே

‡ வட்டு நடுவே ⋆
வளர்கின்ற ⋆
மாணிக்க மொட்டு நுனையில் ⋆
முளைக்கின்ற முத்தே போல் ⋆
சொட்டுச் சொட்டென்னத் ⋆
துளிக்கத் துளிக்க ⋆
என் குட்டன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.1** ॥

கிங்கிணி கட்டிக் ⋆
கிறி கட்டி ⋆
கையினில் கங்கணம் இட்டுக் ⋆
கழுத்தில் தொடர் கட்டி ⋆
தன் கணத்தாலே ⋆
சதிரா நடந்து வந்து ⋆
என் கண்ணன் என்னைப் புறம் புல்குவான் ⋆
எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.2** ॥

கத்தக் கதித்துக் ⋆
கிடந்த பெருஞ்செல்வம் ⋆
ஒத்துப் பொருந்திக் கொண்டு ⋆
உண்ணாது மண் ஆள்வான் ⋆
கொத்துத் தலைவன் ⋆

குடி கெடத் தோன்றிய ⋆
அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
ஆயர்கள் ஏறென் புறம் புல்குவான் ॥ **1.10.3** ॥

நாந்தகம் ஏந்திய ⋆
நம்பி சரண் என்று ⋆
தாழ்ந்த தனஞ்சயற்காகி ⋆
தரணியில் ⋆
வேந்தர்கள் உட்க ⋆
விசயன் மணித் திண் தேர் ⋆
ஊர்ந்தவன் என்னைப் புறம் புல்குவான் ⋆
உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.4** ॥

வெண் கலப் பத்திரம் ⋆
கட்டி விளையாடி ⋆
கண் பல செய்த ⋆
கருந்தழைக் காவின் கீழ் ⋆
பண் பல பாடிப் ⋆
பல்லாண்டிசைப்ப ⋆
பண்டு மண் பல கொண்டான் புறம் புல்குவான் ⋆
வாமனன் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.5** ॥

சத்திரம் ஏந்தித் ⋆
தனி ஒரு மாணியாய் ⋆
உத்தர வேதியில் ⋆
நின்ற ஒருவனை ⋆
கத்திரியர் காணக் ⋆
காணி முற்றும் கொண்ட ⋆

பத்திராகாரன் புறம் புல்குவான் ⋆
பார் அளந்தான் என் புறம் புல்குவான் ‖ **1.10.6** ‖

பொத்த உரலைக் கவிழ்த்து ⋆
அதன் மேல் ஏறி ⋆
தித்தித்த பாலும் ⋆
தடாவினில் வெண்ணெயும் ⋆
மெத்தத் திருவயிறார ⋆
விழுங்கிய ⋆
அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
ஆழியான் என்னைப் புறம் புல்குவான் ‖ **1.10.7** ‖

மூத்தவை காண ⋆
முது மணல் குன்றேறிக் ⋆
கூத்துவந்தாடிக் ⋆
குழலால் இசை பாடி ⋆
வாய்த்த மறையோர் வணங்க ⋆
இமையவர் ஏத்த வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் ‖ **1.10.8** ‖

கற்பகக் காவு ⋆
கருதிய காதலிக்கு ⋆
இப்பொழுதீவன் என்று ⋆
இந்திரன் காவினில் ⋆
நிற்பன செய்து ⋆
நிலாத் திகழ் முற்றத்துள் ⋆
உய்த்தவன் என்னைப் புறம் புல்குவான் ⋆
உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் ‖ **1.10.9** ‖

‡ ஆய்ச்சி அன்றாழிப் பிரான் ⋆
புறம் புல்கிய ⋆
வேய்த் தடந்தோளி சொல் ⋆
விட்டுசித்தன் மகிழ்ந்து ⋆
ஈத்த தமிழ் இவை ⋆
ஈரைந்தும் வல்லவர் ⋆
வாய்த்த நன் மக்களைப் பெற்று ⋆
மகிழ்வரே ‖ **1.10.10** ‖

அடிவரவு — வட்டு கிங்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சூது

வட்டுநடுவே முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்